முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

மட்டம் 01 பரீட்சை – 2026 யூலை

(1901) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2026-08-01
காலை
[9.00 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

பக்கங்கள் : 10
வினாக்கள் : 06

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தமுடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

<u>பகுதி A</u>

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

1.1 பின்வருவனவற்றுள் கணக்கீட்டின் பிரதான நோக்கமாக அமைவது எது?

(1) வணிக இலாபத்தைக் கணிப்பிடுவது.

(2) முக்கியமான பொருளாதாரத் தீர்மானங்களை எடுப்பதற்காக நாட்டதாரர்களுக்கு நிதித் தகவல்களை வழங்குவது.

(3) வணிகச் செலவினங்களைக் குறைத்து வருமானத்தை அதிகரிப்பது.

(4) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருடாந்த வரித் திரட்டினைச் சமர்ப்பிப்பது.

1.2 பின்வருவனவற்றுள் எது கணக்கீட்டின் ஒரு கூறு (element) **அல்ல**?

(1) வருமானம்   (2) சொத்துக்கள்

(3) பொறுப்புக்கள்   (4) பரீட்சை மீதி

1.3 பின்வருவனவற்றுள் கணக்கீட்டுச் செயன்முறையில் ஒரு கணக்கீட்டு உள்ளீடாகக் கருதப்படுவது எது?

(1) ரூ.1,000,000/- பெறுமதியான மோட்டார் வாகனத்தின் கொள்வனவை ஒரு சொத்தாகப் பதிவு செய்தல்.

(2) மாதத்திற்கான மொத்தக் கடன் விற்பனை ரூ.500,000/- ஐ விற்பனைக் கணக்கிற்கு மாற்றுதல்.

(3) தீ விபத்து காரணமாக ரூ. 30,000/- பெறுமதியான இருப்பின் இழப்பு.

(4) வணிகத்தின் பரீட்சை மீதியைத் தயாரித்தல்.

1.4 பின்வரும் தகவல்கள் 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சமன் டிரேடர்ஸ்** என்ற ஒரு தனியுடமை வியாபாரத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

	ரூ.
2025 ஏப்ரல் 01 இல் மூலதனம்	5,000,000
2026 மார்ச் 31 இல் மொத்தச் சொத்துக்கள்	8,500,000
ஆண்டின்போது உள்ளிடப்பட்ட மேலதிக மூலதனம்	500,000
ஆண்டின்போதான எடுப்பனவுகள்	600,000
2026 மார்ச் 31 இல் பொறுப்புக்கள்	2,000,000

மேற்படி தகவல்களின் அடிப்படையில், **சமன் டிரேடர்ஸின்** 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம்:

(1) ரூ. 400,000/-. (2) ரூ. 1,500,000/-. (3) ரூ. 1,600,000/-. (4) ரூ. 1,400,000/-.

1.5 கடனடிப்படையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கொள்வனவொன்றைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு மூல ஆவணம் (source document):

(1) கொள்வனவு விலைப்பட்டியல் (Invoice)
(2) நாட்குறிப்பேட்டு உறுதிச்சீட்டு (Voucher)
(3) கொடுப்பனவு உறுதிச்சீட்டு
(4) செலவுக் குறிப்பு (Credit Note)

1.6 **வரையறுக்கப்பட்ட நிமல் (தனியார்) கம்பனி** சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கான அரசாங்க ஊக்கத் தொகைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, கார்பன் தட இலக்குகளை அடைவதற்காக சூரிய சக்தியில் முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளது.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், PESTEL காரணிகளின் எந்தக் கலவை மிகவும் பொருத்தமானது?

(1) சுற்றுச்சூழல் மற்றும் அரசியல் காரணிகள்
(2) அரசியல் மற்றும் சமூகக் காரணிகள்
(3) தொழினுட்பம் மற்றும் சட்டக் காரணிகள்
(4) தொழினுட்பம் மற்றும் சமூகக் காரணிகள்

1.7 வணிகத்தின் வங்கிக் கடனின் மூலதனப் பகுதியைத் தீர்ப்பதற்காக ரூ.50,000/- காசாகச் செலுத்தப் பட்டது. இந்தப் பரிவர்த்தனையால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படும் சரியான தாக்கத்தை பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க:

(1) சொத்துக்கள் ரூ. 50,000/- இனால் குறைவடையும் மற்றும் மூலதனம் ரூ. 50,000/- இனால் குறைவடையும்.

(2) சொத்துக்கள் ரூ. 50,000/- இனால் குறைவடையும் மற்றும் பொறுப்புக்கள் ரூ. 50,000/- இனால் குறைவடையும்.

(3) சொத்துக்கள் ரூ. 50,000/- இனால் அதிகரிக்கும் மற்றும் பொறுப்புக்கள் ரூ. 50,000/- இனால் அதிகரிக்கும்.

(4) பொறுப்புக்கள் ரூ. 50,000/- இனால் அதிகரிக்கும் மற்றும் மூலதனம் ரூ. 50,000/- இனால் குறைவடையும்.

1.8 முன்னெச்சரிக்கை எண்ணக்கருவைப் பொறுத்தவரை, பின்வரும் கணக்கீட்டுச் செய்கைகளில் எது சரியானது?

(1) காசு பெறப்பட்டதா, இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது, வருவாய்/ வருமானமானது குறிப்பிட்ட கணக்கீட்டுக் காலப்பகுதியில் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

(2) உரிமம் ஒன்றின் சொத்துக்களின் பெறுமதி, கொள்வனவுக் கிரயத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது.

(3) விற்பனைக் கிரயம், விற்பனை வருமானத்துடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும்.

(4) கிரயம் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ஆகியவற்றில் எது குறைவானதோ அந்தப் பெறுமதியில் இருப்புகள் மதிப்பிடப்படுகின்றன.

1.9 உரிமையாளர், தனது தனிப்பட்ட பாவனைக்காக வணிகத்திலிருந்து ரூ. 20,000/- காசு எடுத்துள்ளார். இந்தப் பரிவர்த்தனையைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு :

(1) வரவு - காசுக் கணக்கு ரூ. 20,000/- மற்றும் செலவு – மூலதனக் கணக்கு ரூ. 20,000/-.

(2) வரவு - காசுக் கணக்கு ரூ. 20,000/- மற்றும் செலவு – எடுப்பனவுகள் கணக்கு ரூ. 20,000/-.

(3) வரவு - எடுப்பனவுகள் கணக்கு ரூ. 20,000/- மற்றும் செலவு - காசுக் கணக்கு ரூ. 20,000/-.

(4) வரவு - எடுப்பனவுகள் கணக்கு ரூ. 20,000/- மற்றும் செலவு - மூலதனக் கணக்கு ரூ. 20,000/-.

1.10 பின்வருவனவற்றுள் இலங்கையில் பயன்படுத்தப்படும் பொதுக் கணக்கீட்டு மென்பொருளுக்கான ஓர் உதாரணமாக **அமையாதது** எது?

(1) இருப்புக் கட்டுப்பாட்டு முறைமை	(2) SAGE.
(3) விரைவுப் புத்தகம்	(4) ACCPAC.

கீழே **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் குறிப்பிடுக.*

1.11 வெளிப்படுத்துகை எண்ணக்கருவின்படி, தீர்மானமெடுப்பதுடன் தொடர்புடைய அனைத்து பொருண்மையான தகவல்களும் தவிர்க்கப்படாது வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.12 உரிமம் ஒன்றின் பரீட்சை மீதியை ஒப்புக்கொள்வது பேரேடுகளில் உள்ள அனைத்து கணக்கீட்டு வழுக்களும் கண்டறியப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்கிறது.

1.13 காசுக் கணக்கு மற்றும் அலுவலக உபகரணக் கணக்கு என்பன பெயரளவுக் (nominal) கணக்குகளுக்கான உதாரணங்களாகும்.

1.14 பொது நாட்குறிப்பேடு என்பது ஒரு முதன்மைப் பதிவேடாகும்.

1.15 இரகசியத்தன்மை (confidentiality) என்பது கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் பின்பற்றும் நெறிமுறைக் கோவையின் (code of ethics) ஓர் அடிப்படைக் கோட்பாடாகும்.

1.16 தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

1.16 ஒரு நிறுவனம் கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு முறைமைக்கு மாறுவதற்கான இரண்டு (02) காரணங்களைப் பட்டியலிடுக.

1.17 “பொறுப்பு (liability)” என்னும் பதத்தை வரையறை செய்க.

1.18 மூல ஆவணமொன்றில் உள்ளடக்கப்படும் இரண்டு (02) விடயங்களை/உருப்படிகளைக் குறிப்பிடுக.

1.19 முதன்மைப் பதிவேடுகளைப் பேணுவதற்கான இரண்டு (02) நோக்கங்களைக் குறிப்பிடுக.

1.20 பின்வரும் தகவல்கள் 2026 மார்ச் மாதத்திற்கான **ABC டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

	ரூ.
2026 மார்ச் 01 இல் வியாபார வருமதிகள் (கடன்பட்டோர்) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி	1,400,000
மாதத்திற்கான விற்பனை நாளேட்டு மொத்தம்	6,000,000
மாதத்தின் போது பதிவழிப்புக் செய்யப்பட்ட அறவிடமுடியாக் கடன்	400,000
மாதத்தின்போது கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு	4,800,000

2026 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் (கடன்பட்டோர்) கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை அடையாளங் காண்க.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 02

(A) **ஷெஹன்சா டிரேடர்ஸ்** என்பது சீனியை விற்பனை செய்யும் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு தனியுடமை வியார்பாரமாகும்:

பின்வரும் தகவல்கள் 2026 மே மாதத்தில் செய்யப்பட்ட கடன் கொள்வனவுகளுடன் தொடர்புடையதாகும் :

திகதி	**விலைப் பட்டியல் இல.**	**வழங்குநர்**	**அளவு (kg)**	**ஒரு kg இன் விலை (ரூ.)**	**வியாபாரக் கழிவு**
01.05.2026	1245	வரை. பீஆர்சீ (தனி.) கம்பனி	3,000	190/-	-
09.05.2026	14879	ஷான் சப்ளையர்ஸ்	4,000	230/-	5%
19.05.2026	0025	சிற்றி டிஸ்றிபியூட்டர்ஸ்	2,500	190/-	-
23.05.2026	14885	ஷான் சப்ளையர்ஸ்	1,500	230/-	5%

மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு,

நீங்கள் செய்ய வேண்டியது :

2026 மே மாதத்திற்கான மேற்படி பரிவர்த்தனைகளைப் பதிவு செய்வதற்கான **ஷெஹன்சா டிரேடர்ஸ்** இன் கொள்வனவு நாளேட்டை (கொள்வனவு நாட்குறிப்பேடு) **தயாரிக்க.** (05 புள்ளிகள்)

(B) 2026 மார்ச் 31 இல், **சுப்பர் டிரேடர்ஸின்** வங்கிக் கூற்று ரூ. 100,000/- சாதகமான மீதியை காட்டுகின்ற அதே வேளை, காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) வரவு (சாதகமான) மீதி ரூ.185,000/- ஐக் காட்டியது.

வேறுபாட்டிற்கான பின்வரும் காரணங்கள் அடையாளங் காணப்பட்டன:

(1) 2026 மார்ச் 30 இல் வழங்குநர் ஒருவருக்கு ரூ. 25,000/- பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. ஆயினும் 2026 மார்ச் 31 வரையிலும் கொடுப்பனவுக்காக அக்காசோலை வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(2) வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த நிலையியற் கட்டளை அறிவுறுத்தல்களின்படி, வங்கியானது கடன் தவணைக் கட்டணம் ரூ.50,000/- ஐ வரவுப்பதிவு செய்திருந்தது. ஆயினும் இது காசேட்டில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(3) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.60,000/- பெறுமதியான ஒரு காசோலை 2026 மார்ச் 30 இல் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. எவ்வாறாயினும், இது 2026 மார்ச் 31 வரை தேறியிருக்கவில்லை.

(4) வங்கியானது மாதத்திற்கான வங்கிக் கட்டணங்களாக ரூ.15,000/- ஐ வரவுப் பதிவு செய்திருந்தது. எவ்வாறாயினும், இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(5) வாடிக்கையாளர் ஒருவர் ரூ. 15,000/- இனை வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்திருந்தார். எவ்வாறாயினும், இந்தப் பரிவர்த்தனை காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

நீங்கள் செய்ய வேண்டியவை :

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு). (03 புள்ளிகள்)

(b) 2026 மார்ச் 31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 03

தசுன் என்பவர் 2025 டிசெம்பர் 01 இல் ஒரு வணிகத்தை ஆரம்பித்தார். பின்வரும் பரிவர்த்தனைகள் 2025 டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்றிருந்தன.

(1) **தசுன்** 2025 டிசெம்பர் 01 இல் ஆரம்ப மூலதனமாக ரூ. 1,800,000/- காசையும் ரூ.2,000,000/- பெறுமதியான ஒரு மோட்டார் வாகனத்தையும் முதலீடு செய்திருந்தார்.

(2) மீள்விற்பனைக்காக **சக்தி டிரேடர்ஸி**டமிருந்து கடனடிப்படையில் ரூ. 1,700,000/- பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

(3) ரூ. 700,000/- கிரயமான பொருள்கள் கடனடிப்படையில் ரூ. 1,100,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டன. மேலும், ரூ. 200,000/- கிரயமான பொருள்கள் ரூ. 300,000/- காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.

(4) **தசுன்** இன் தனிப்பட்ட பணத்தில், வணிகத்தின் மின்சாரக் கட்டணம் ரூ. 25,000/- செலுத்தப்பட்டது.

(5) **சக்தி டிரேடர்ஸ்** இற்குச் செலுத்த வேண்டிய தொகை, 5% காசுக் கழிவுக்கு உட்பட்டு முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டது.

(6) சம்பளங்களாக ரூ. 200,000/- காசாகச் செலுத்தப்பட்டது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) மேற்படி பரிவர்த்தனைகளின் பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான தாக்கத்தைக் **குறிப்பிடுக**.

(மோட்டார் வாகனங்கள் + இருப்பு + வியாபார வருமதிகள் (கடன்பட்டோர்) + காசு = உரிமையாண்மை (மூலதனம்) + பொறுப்புகள்)

(07 புள்ளிகள்)

(b) 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான இலாபத்தைக் **கணிக்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04

சமிக்கா உருக்கு என்பது உருக்கிலான தளபாடங்களைத் தயாரிக்கின்ற ஒரு கம்பனி ஆகும். பின்வரும் தகவல்கள் 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சமிக்கா உருக்குக்** கம்பனியின் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

விவரம்	ரூ.
2025 ஏப்ரல் 01 இல் மூலப் பொருள் இருப்புகள்	250,000
ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட மூலப் பொருள்கள்	6,250,000
மூலப் பொருள்களின் உள்வந்த வண்டிக்கூலி	100,000
2025 ஏப்ரல் 01 இல் புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது)	-
நேர் கூலிகள்	2,000,000
தொழிற்சாலைக்கான காப்புறுதி	120,000
மின்சாரம்	400,000
வாடகை	800,000
தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம்	720,000
இயந்திரப் பராமரிப்பு	50,000
பாதுகாப்புக் கட்டணங்கள்	900,000
தேய்மானம் - பொறி மற்றும் இயந்திரம்	200,000
தேய்மானம் - மோட்டார் லொறி	100,000

பின்வரும் மேலதிகத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன :

(1) 2026 மார்ச் 31 இலான இறுதி இருப்பு மீதிகள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன:

விவரம்	ரூ.
மூலப் பொருள்கள் (கிரயத்தில்)	400,000
புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது)	200,000

(2) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்:

செலவினங்கள்	தொழிற்சாலை	அலுவலகம்
மின்சாரம்	80%	20%
வாடகை	60%	40%
பாதுகாப்புக் கட்டணங்கள்	80%	20%

(3) பொறி மற்றும் இயந்திரமும், மோட்டார் லொறியும் தொழிற்சாலை நோக்கங்களுக்காகவே முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன.

(4) உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் உற்பத்திக் கிரயத்தில் 18% இலாபம் வைத்து, வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

நீங்கள் செய்ய வேண்டியது :

2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சமிக்கா உருக்குக் கம்பனியின்** உற்பத்திக் கிரயக் கூற்றை (உற்பத்திக் கணக்கு)த் **தயாரிக்க.** (10 புள்ளிகள்)

வினா 05

ரஷீத் டிரேடர்ஸ் இன் உதவிக் கணக்காளரால் தயாரிக்கப்பட்ட 2025 டிசெம்பர் 31 இலான பரீட்சை மீதி, அதன் வரவுப் பக்கத்தில் ரூ. 42,500/- வித்தியாசத்தைக் காட்டியது. அது தொங்கற் கணக்கிற்கு வரவுப் பதிவு செய்யப்பட்டு, 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. வரைவு நிதிக் கூற்றுக்களின்படி, ரூ. 250,000/- இலாபம் பதிவு செய்யப்பட்டது. **ரஷீத் டிரேடர்ஸ்** வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகளுக்காக கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுகிறது.

வித்தியாசத்திற்கான பின்வரும் காரணங்கள் பின்னர் அடையாளங் காணப்பட்டன:

(1) ரூ. 80,000/- இற்கான அச்சுப்பொறி ஒன்றின் கொள்வனவு, கணினிப் பராமரிப்புக் கணக்கிற்கு வரவுப்பதிவு செய்யப்பட்டது. அத்துடன், அச்சுப்பொறி மீதான ஆண்டிற்கான பொருத்தமான தேய்மானம் ரூ. 20,000/- பதிவு செய்யப்படவில்லை.

(2) காசுக் கொள்வனவு ரூ. 25,000/- கொள்வனவுக் கணக்கில் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(3) காசாக மேற்கொள்ளப்பட்ட பயணச் செலவு ரூ. 5,000/- பயணச் செலவினக் கணக்கில் இருமுறை பதிவு செய்யப்பட்டிருந்தது. அதே வேளை அது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(4) 2025 டிசெம்பர் மாதத்திற்காகச் செலுத்தப்பட்ட மின்சாரச் செலவினம் ரூ. 25,000/- மின்சாரச் செலவினக் கணக்கில் ரூ. 2,500/- ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) விற்பனை நாளேட்டு மொத்தம் ரூ. 4,000/- இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் **தயாரிக்க.** (05 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கைத் **தயாரிக்க.** (02 புள்ளிகள்)

(c) 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சீராக்கப்பட்ட இலாபத்தைக் (adjusted profit) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B இன் முடிவு

பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா 06

பவான் டிரேடர்ஸ் என்பது **பவான்** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2026 மார்ச் 31 இலான **பவான் டிரேடர்ஸின்** பரீட்சை மீதி பின்வருமாறு :

பவான் டிரேடர்ஸ்

2026 மார்ச் 31 இலான பரீட்சை மீதி *(ரூ.'000)*

விவரம்	வரவு	செலவு
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்- கிரயத்தில்:		
காணியும் கட்டடமும் (காணிப் பெறுமதி – ரூ.4,000,000/-)	8,000	
அலுவலக உபகரணம்	4,800	
மோட்டார் வாகனங்கள்	2,500	
திரண்ட தேய்மானம் - 2025 ஏப்ரல் 01 இல்:		
கட்டடம்		2,000
அலுவலக உபகரணம்		1,400
மோட்டார் வாகனங்கள்		1,250
விற்பனைகள்		154,000
விற்பனைத் திரும்பல்கள்	2,000	
கொள்வனவுகள்	80,000	
2025 ஏப்ரல் 01 இல் இருப்பு	6,000	
கையிலும் வங்கியிலும் உள்ள காசு	1,550	
வியாபார சென்மதிகள்		1,825
வங்கிக் கடன்		3,000
வியாபார வருமதிகள்	36,000	
சம்பளங்களும் கூலிகளும்	26,000	
தொலைபேசிக் கட்டணங்கள்	450	
அலுவலக வாடகை	4,500	
காப்புறுதிச் செலவினங்கள்	355	
மின்சாரச் செலவினங்கள்	1,600	
அலுவலகப் பராமரிப்புச் செலவினங்கள்	3,050	
பாதுகாப்புக் கட்டணங்கள்	770	
2025 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு		14,100
மொத்தம்	**177,575**	**177,575**

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) கிரயத்தில் மதிப்பிடப்பட்ட 2026 மார்ச் 31 இலான இறுதி இருப்பு ரூ. 3,500,000/-.

(2) வணிகத்தின் கொள்கையானது பின்வருமாறு கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்வதாகும்:

கட்டடம்	:	ஆண்டிற்கு 10%
அலுவலக உபகரணம்	:	ஆண்டிற்கு 25%
மோட்டார் வாகனங்கள்	:	ஆண்டிற்கு 20%

(3) அலுவலகப் பராமரிப்புச் செலவினங்களில் 2025 அக்டோபர் 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 200,000/- பெறுமதியான ஒரு கணினி உள்ளடங்குகின்றது.

(4) 2026 மார்ச் 01 இல், 12% ஆண்டு வட்டியில் ரூ.3,000,000/- வங்கிக் கடன் பெற்றுக் கொள்ளப் பட்டது. இக்கடனை 24 மாதங்களுக்குள் முற்றாகத் தீர்ப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வங்கியானது காலப்பகுதிக்குரிய வட்டியை இன்னமும் வசூலித்திருக்கவில்லை என்பதுடன் 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகச் செலுத்த வேண்டிய வட்டி, கணக்கேடுகளில் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(5) வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலையை அடைந்ததன் காரணமாக ரூ. 1,000,000/- தொகையை அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்வதற்கும் 2026 மார்ச் 31 இல் எஞ்சியுள்ள வியாபார வருமதிகள் மீதியில் 10% ஏற்பாட்டைச் செய்வதற்கும் **பவான்** தீர்மானித்துள்ளார்.

(6) 2025/26 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ரூ. 60,000/- ஆனது 2026 மார்ச் 31 ஆந் திகதிய நிலவரப்படி செலுத்தப்பட்டிருக்கவில்லை.

நீங்கள் செய்ய வேண்டியவை :

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்க** :

(a) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (11 புள்ளிகள்)

(b) 2026 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

மட்டம்	செயல் வினைச்சொல்	வரைவிலக்கணம்	மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள்
நினைவிற் கொள்ளல் உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக் கருக்கள், அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல்	அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify)	யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல்	தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல்
	வரையறுக்க (Define)	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல்
	ஏற்பிசைவு செய்க (Recognize)	முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு	முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல்
	குறிப்பிடுக/ கூறுக (State)	தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு	பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல்
	பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List)	பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர்	பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல்
	பதிவு செய்க (Record)	ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல).	தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல்
விளங்கிக் கொள்ளல் தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல்	கட்டியெழுப்புக (Construct)	கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல்	வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல்
	வேறுபடுத்துக (Differentiate)	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல்	எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல்
	கலந்துரையாடுக / ஆராய்க (Discuss)	ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல்	பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல்
	விபரிக்க (Explain)	எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல்	தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல்
	எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate)	ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல்	பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல்
	உட்பொருளை விளக்குக (Interpret)	தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல்	உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல்
	விளக்குக (Describe)	ஏதாவதொன்றின் விரிவான விளக்கம்	கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல்
	பொழிப்பாக்குக (Summarise)	பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று	பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல்
பிரயோகித்தல் கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது..	பிரயோகிக்க (Apply)	ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல்	ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல்
	கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate)	கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல்	ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல்
	தீர்மானிக்க (Determine)	ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல்	கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிபு செய்தல்
	செயல் விளக்கமளிக்குக (Demonstrate)	ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல்	கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல்
	தயாரிக்க (Prepare)	பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல்
	பயன்படுத்துக (Use)	ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல்	தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல்
	முன்வைக்குக (Present)	தகவல்களை பயனுறுதிமிக்க வகையில் பகிர்தல்	பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல்
பகுப்பாய்வு தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல்	பகுப்பாய்வு செய்க (Analyse)	ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல்	சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல்
	ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல்	பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல்
	பிரித்தறிக (Distinguish)	தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல்	பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல்
	பரீட்சிக்க / சோதிக்க (Examine)	ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல்	ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல்
	கோடிட்டுக் காட்டுக (Outline)	பிரதான விடயங்களின் பொழிப்பு	பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல்
	நடத்துக (Conduct)	ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல்
	அறிக்கையிடுக (Report)	கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு	பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல்
மதிப்பீடு தேர்வு நிபந்தனை அல்லது நியமங் களின் அடிப்படை யில் யோசனைகள் அல்லது பொருள் களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல்	ஆலோசனை வழங்குக (Advise)	யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல்	பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல்
	மதிப்பீடு செய்க (Evaluate)	பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு	தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல்
	அமைக்குக (Formulate)	ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி	நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல்
	பரிந்துரை செய்க (Recommend)	பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல்	தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல்
உருவாக்குதல் ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல்	உருவாக்குக (Create)	புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல்	அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல்
	மதிப்பிடுக (Assess)	தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல்	கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல்
	விருத்தி செய்க (Develop)	ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம்	காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல்
	முன்மொழிக (Propose)	கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல்	ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல்
	இணைப்பாக்கம் செய்க (Synthesis)	ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல்	பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல்
	வடிவமைக்குக (Design)	ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல்	ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல்
	தொகுக்குக (Compile)	பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல்	சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல்